**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. TAMIL NADU MINERALS LIMITED, SF.NO. 486 (PART) & 736/4, LEASE OVER AN EXTENT OF 27.04.5 HA AT JAKKERY VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 07.01.2025 AT 11.00 AM M/S. KALA MAHAL, NO. 798/2 & 800/1-3-4, KUNDUMARANAPALLI VILLAGE, KELAMANGALAM, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.G.Kumaran | : | Assistant Commissioner (Excise), Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. T.SenthilKumar | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru.K.Sakthivel | : | Divisional Manager M/s. Tamil Nadu Minerals Limited, Krishnagiri |
| 5 | Thiru.E.Ganesan | : | Deputy Manager, M/s. Tamil Nadu Minerals Limited, Krishnagiri |
| | Public | : | 50 Nos. (Attendence enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Assistant Commissioner (Excise), Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and TAMIN officials who have attended the public hearing for the proposed M/s. Tamil Nadu Minerals Limited, SF.No. 486 (Part) & 736/4, lease over an extent of 27.04.5 Ha at Jakkery Village, Denkanikottai Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such

as, “Dinathanthi” and “The New Indian Express” dated 28.11.2024 and pamphlets regarding public hearing was issued to the public of Onnukuruki Village, Malaepalaym Village, Muninathapuram Village, Chinnati Village, Davaragarai Village, Jakkeri Village and Virupachi Nagar with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the TAMIN officials will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Assistant Commissioner (Excise), Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the The Assistant Commissioner (Excise), Krishnagiri has requested the TAMIN officials to explain about their proposed Colour granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.E.Ganesan, Deputy Manager, M/s. Tamil Nadu Minerals Limited Colour Granite Quarry, Krishnagiri of the proposed Colour Granite quarry project has made presentation about the proposed Colour Granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Colour granite quarry project.

The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Rajeshkumar, President, Jakkeri Panchyat:**

Thiru.Rajeshkumar has said that there is frequent movement of wild animals like elephants and peacocks in the vicinity of the quarry. Also, a lake is located at the distance of one kilometer from this quarry in Mallepalayam Village. He mentioned that agriculture is the main occupation in his village and the existing quarries have affected the farming activities. The road that leading to Onnukuruki village also damaged due to quarry truck movements.

2. **Thiru. V.Manoharan, Jakkeri Panchyat:**

Thiru. V.Manoharan has said, the presentation about the quarry as explained by the proponent was good. However, the operation of the quarry will affect the flower plants and mango farms in the village and also the roads will be damaged, thereby the farmers will suffer a huge income loss. Therefore, he requested that the quarry should be operated only after providing appropriate solutions to these problems.

3. **Thiru. Lokesh, Mallaepalayam Village:**

Thiru. Lokesh has said that his agricultural land is located near the hill where the quarry activities will take place. He said that due to the establishment of this quarry will affect the elephant corridor in Sanamavu area and the peacocks living in the forest. The Nagamunishwarar temple is within the vicinity of the quarry. Here the devotees perform worship and special pujas. All these will be affected by establishment of this quarry. The road leading to Onnukurki village is affected by existing quarries. Also, two hills have already been depleted in the area by the quarries. Therefore, he requested to not implement the quarry project.

4. **Thiru. Shankar, Vasanth Nagar:**

Thiru. Shankar has said that houses and farms of the farmers are located near the proposed granite quarry. They were already affected by the stones falling from existing quarry activities. Also, small lakes are located nearer to the quarry and cattles are utilising water from these lakes. All these would be affected by this new quarry. The road in the village will be damaged by the quarry trucks. Therefore, he requested not to establish this quarry as it would cause a lot of hindrance to the villagers.

5. **Thiru. Shivkumar, Jakkery Nagar:**

Thiru. Shivakumar has said that his land is situated in the survey no.736/2 located nearby the quarry and granite stones were mined out from our land illegally. In this regard, he has submitted a petition for compensation and requested to take appropriate action on his petition.

6. **Thiru. Ramakrishnan, Mallaepalayam:**

Thiru. Ramakrishnan has said that in spite of this quarry will increase the revenue for the government, it will affect the people heavily. Without trees and mountains there would be no rain. According to the current weather report, there is no rainfall in Kelamangalam area. Due to this, lakes were dried with heavy drought thereby affecting the water supply. Therefore, he requested not to establish this quarry to conserve the nature.

7. **Thiru. Nandish, Onnukuruki Village:**

Thiru. Nandish has said that lot of trees have to be cut down to establish this quarry. He questioned that if the saplings are planted to balance this, when will they grow as tress and prevent air pollution? Further, he said that in his village there is only a very small road, and if heavy trucks use that road, the movement of essential ambulance and two-wheelers will be hampered.

8. **Thiru. Munikrishnappa, Onnukuruki Village:**

Thiru. Munikrishnappa has said that the area was fully planted with trees during 1980s by the Mettur Soil Conservation Association. All these trees have now been cut down for establishing the granite quarry. Also, farmers and tribal people are living near this TAMIN's Proposed quarry. Further, he said that, the elephant corridor is passing through this area. All livelihood will be affected by the operation of this quarry.

9. **Anonymous Person:**

He said that a Shiva temple called Nagalingeshwarar temple is located near this quarry. Deepam will be lighted here during the season of Thiruvanamalai deepam festival. If a quarry is established here, there will be more vibrations generated and the temple will be damaged. The cattle of five to six nearby farming villages depend on this mountain. Therefore, he said that establishment of this quarry will cause more damage to his village. **(He expressed his opinion in Telugu Language)**

10. **Thiru. Krishnappa, President, Farmers Association:**

Thiru. Krishnappa has said that the dust emanated from the nearby quarry has been settling on their cabbage farm. This causes huge loss to the farmers. So, he asked the quarry management to provide compensation to the farmers in his village once in 6 months or a year. If this is not provided, then permission should not be granted for this quarry. **(He expressed his opinion in Telugu Language)**

11. **Thiru. Ravi, Onnukuruki Village:**

Thiru. Ravi has said that we have been living in this area for 29 years. So far no such public hearing meeting has been held here before for any quarry operation. Further, he mentioned that the quarry managements have never

provided any financial assistance to our villages like Onnukuruki, Jakke Mallepallam. The houses of the villagers, cattles and elephant corridor will be affected by the establishment of this quarry.

**12. Thiru. Rajappa, Onnukuruki Village:**

Thiru. Rajappa has said that his patta land is located near this TAMIN quarry. A lot quarry waste is dumped on our land by the existing quarries. They have manipulated me and dumped quarry waste at my land because I know only Telugu and do not know Tamil. He said that it cost 20 to 30 lakhs to remove this waste from my land. Also, the shivan temple here is very important for the villagers. Therefore, he opposed this quarry establishment in this village. **(He expressed his opinion in Telugu Language)**

**13. Thiru. Rajeshkumar, President, Jakkeri Panchyat:**

Thiru. Rajesh Kumar has said that the villagers intend to take legal action against this quarry. He also said that the ancient Shiva temple here is very important to the public. Therefore, he requested to stop this quarry project for the concern of public welfare.

**14. Thiru. Ramakrishnan, Mallaepallam Village:**

Thiru. Ramakrishnan has said that the 800-year-old and famous Shiva Temple and Cave Temple are located near this quarry. Deepam will be lighted here during the season of Thiruvanamalai deepam festival. Now, the establishment of this quarry will affect these temples and will go against the religious faith of the people. He warned that many workers who worked in the existing quarry were died.

**15. Thiru. Shankar, Vasantha Nagar:**

Thiru. Shankar has said that they cannot do the cattle rearing due to existing quarry operation. Also, the Gangamma temple, houses and lakes in our village will

be affected by this quarry project. Deepam will be lighted here during the season of Thiruvanamalai deepam festival. He said, the establishment of this quarry will affect the Hindu people's faith. He also informed that, the public hearing meeting may have been held near the quarry during holiday.

**16. Thiru. Lokesh, Mallaepalayam Village:**

Thiru. Lokesh said that the information about the temples here is available on the Google Maps and requested that this quarry should not be established here so as not to disturb the faith of the devotees.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 6 number of petitions were received on the proposed M/s. Tamil Nadu Minerals Limited Colour Granite Quarry project during the public hearing meeting. The petition is enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Colour Granite Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| District Environmental Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Hosur | Assistant Commissioner (Excise)<br>Krishnagiri | District Collector<br>Krishnagiri |
|---|---|---|

**தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கிரே கிரானைட் குவாரி, சர்வே. எண்.486 (பகுதி) & 736/4, ஜக்கேரி கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வண்ண கிரானைட் குவாரி 27.04.05 ஹெக்டேர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 07.01.2025 அன்று எண். 798/2 & 800/1-3-4, குந்துமாரனப்பள்ளி கிராமம், கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை வட்டம், , கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். கலா மஹாலில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.கோ.குமரன் | : | உதவி ஆணையர் (கலால்), கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.த.செந்தில்குமார் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. K. சக்திவேல் | : | கோட்ட மேலாளர் தி/ள்.தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட், கிருஷ்ணகிரி |
| 5 | திரு. E. கணேசன் | : | துணை மேலாளர் தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட், கிருஷ்ணகிரி |
| | பொதுமக்கள் | : | 50 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வண்ண கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த உதவி ஆணையர் (கலால்) கிருஷ்ணகிரி, பொதுமக்கள் மற்றும் தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வண்ண கிரானைட் குவாரியின் மேலாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினந்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 28.11.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், ஒன்னுக்குறுக்கி கிராமம், மல்லேப்பாளையம் கிராமம், முனிநாதபுரம் கிராமம், சின்னட்டி கிராமம், தவரக்கரை கிராமம், ஜக்கேரி கிராமம், விருப்பாச்சி நகர் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் மேலாளர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரியின் மேலாளர் வண்ண கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

உதவி ஆணையர் (கலால்) கிருஷ்ணகிரி, அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர், தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வண்ண கிரானைட் குவாரி மேலாளரை உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வண்ண கிரானைட் குவாரி நிறுவனத்தின் துணை மேலாளர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு

கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று வண்ண கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. ராஜேஷ் குமார், ஜக்கேரி, ஊராட்சி மன்றத் தலைவர் :**

திரு. ராஜேஷ் குமார், அவர்கள் இக்குவாரிக்கு அருகில் யானைகள், மயில்கள் போன்ற வனவிலங்குகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. மேலும், இக்குவாரிக்கு ஒரு கிலோமீட்டர் தொலைவில் மல்லேப்பாளையம் என்ற இடத்தில் ஒரு ஏரியானது அமைந்துள்ளது. இவ்வூரில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகளால் விவசாயிகளுக்கு பாதிப்பும், ஒன்னுகுறுக்கியில் அமைந்துள்ள சாலையும் பாதிப்படைந்துள்ளது என்று தெரிவித்தார்.

**2. திரு. V. மனோகரன், ஜக்கேரி கிராமம் :**

திரு. V. மனோகரன் அவர்கள், இக்குவாரி குறித்து விளக்கக்காட்சியில் நன்றாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், இக்குவாரியின் செயல்பாட்டால் கிராமத்தில் உள்ள சாலைகள் பாதிப்படையும் என்றும், பூந்தோட்டங்கள், மாமரங்கள்

ஆகியவை அதிகளவில் பாதிப்படையும் என்று கூறினார். இதனால், விவசாயிகளுக்கு பெரும் வருமான இழப்பு நேரிடும் என கூறினார். எனவே, இப்பிரச்சனைகளுக்கு உரிய தீர்வினை வழங்கிய பின்பே இக்குவாரியை இயக்க வேண்டும் என்று கூறினார்.

3. **திரு. லோகேஷ், மல்லேப்பள்ளம் கிராமம் :**

திரு. லோகேஷ் அவர்கள், இக்குவாரி அமையவுள்ள மலைக்கு அருகில் எனது விவசாய நிலம் அமைந்துள்ளது என்று கூறினார். இக்குவாரி அமைவதால் சானமாவு பகுதியிலுள்ள யானை வழித்தடம், வனத்தில் உள்ள மயில்கள் ஆகியவை பாதிப்படையும் என்று கூறினார். இக்குவாரியின் அமைவிடத்திற்கு அருகில் நாகமுனிஷ்வரர் கோயில் உள்ளது. இங்கு பொது மக்கள் வழிபாடு மற்றும் சிறப்பு பூஜைகள் செய்து வருகின்றனர். இவையாவும் இக்குவாரியால் பாதிப்படையும். ஒன்னுகுறுக்கி பகுதியில் சாலையானது குவாரிகளால் பாதிப்படைந்துள்ளது. மேலும், குவாரிக்காக ஏற்கனவே இப்பகுதியில் இரண்டு மலைகள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. எனவே, இக்குவாரி திட்டத்தை செயல்படுத்த கூடாது என்று கூறினார்.

4. **திரு . சங்கர், வசந்த நகர்:**

திரு. சங்கர் அவர்கள், கிரானைட் குவாரிக்கு அருகில் வீடுகள் மற்றும் விவசாயிகளின் தோட்டங்கள் அமைந்துள்ளது. ஏற்கனவே, குவாரியின் செயல்பாட்டால் பெரிய அளவு கற்கள் எங்கள் வீடுகளிலும் நிலத்திலும் விழுந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும், சிறிய ஏரிகள் குவாரிக்கு அருகே அமைந்துள்ளது. இந்த ஏரிகளில் மாடுகள் நீரை பயன்படுத்தி வருகின்றன. இவையாவும், புதிய குவாரியால் பாதிக்கப்படும் என்று கூறினார். கிராமத்தில் உள்ள சாலையானது குவாரியின் கனரக வாகனங்களின் இயக்கத்தினால் பாதிப்படையும்.

எனவே, எங்கள் கிராம மக்களுக்கு அதிகளவு இடையூறு ஏற்படும் என்பதால் இக்குவாரியை அமைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

**5. திரு . சிவகுமார், ஜக்கேரி கிராமம்:**

திரு. சிவகுமார் அவர்கள், இக்குவாரிக்கு அருகே சர்வே எண்.736/2 ல் எனது நிலம் அமைந்துள்ளது. அங்கு சட்டத்திற்கு புறம்பாக கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. அதற்கு, நஷ்ட ஈடு வழங்குமாறு தான் மனு அளித்துள்ளதாக தெரிவித்தார். எனவே, எனது மனு மீது உரியநடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**6. திரு. ராமகிருஷ்ணன், மல்லேப்பள்ளம் கிராமம் :**

திரு. ராமகிருஷ்ணன் அவர்கள், இக்குவாரியால் அரசுக்கு வருவாய் அதிகரித்தாலும் மக்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்று கூறினார். மரங்கள் மற்றும் மலைகள் இல்லையெனில் மழைப் பொழிவு ஏற்படாது. தற்போதைய வானிலை அறிக்கையின்படி கெலமங்கலம் பகுதியில் மழைப்பொழிவு ஏற்படுவதில்லை. இதனால், ஏரிகள் நீர்வரத்தின்றி வற்றி விடுகிறது. எனவே, இயற்கையை பாதுகாக்க இக்குவாரியை அமைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

**7. திரு. நந்தீஷ், ஒன்னுகுறுக்கி கிராமம் :**

திரு.நந்தீஷ் அவர்கள், இக்குவாரியை அமைப்பதற்கு அதிகளவில் மரங்களை வெட்ட வேண்டியுள்ளது. தற்போது, இதனை சமன் செய்வதற்காக மரங்கள் நடப்பட்டால் அவை எப்போது வளர்ந்து இங்கு ஏற்படும் காற்று மாசினை தடுக்கும் என வினா எழுப்பினார். தங்கள் ஊரில் மிகச்சிறிய ஒத்தையடி பாதை மட்டுமே உள்ளது என்றும், அவ்வழியே, கனரக வாகனங்கள் சென்றால் அத்தியாவசிய அவசர ஊர்தி, இரு சக்கர வாகனங்கள் செல்வதற்கு இடையூறு ஏற்படும் என்று கூறினார்.

**8. திரு. முனிகிருஷ்ணப்பா, ஒன்னுகுறுக்கி கிராமம் :**

திரு. முனிகிருஷ்ணப்பா அவர்கள், இப்பகுதியில் மேட்டூர் மண் பாதுகாப்பு (METTUR SOIL CONSERVATION) அமைப்பின் மூலம் அதிகளவில் செடிகள் 1980 ஆம் ஆண்டுகளில் நடப்பட்டது. அம்மரங்கள் யாவும் தற்போது கிரானைட் குவாரி அமைப்பதற்காக வெட்டப்பட்டுள்ளது. மேலும், இந்த தமிழ்நாடு மினரல் லிமிடெட் குவாரிக்கு அருகில் விவசாயிகள் மற்றும் பழங்குடி மக்கள் வசித்து வருகின்றனர். மேலும், யானை வழித்தடம் இப்பகுதியில் அமைந்துள்ளது. இவையாவும், இக்குவாரியின் செயல்பாட்டால் பாதிப்படையும் என்று கூறினார்.

**9. பெயர் கூறாத நபர் :**

இக்குவாரிக்கு அருகில் நாகலிங்கேஷ்வரர் என்னும் சிவன் கோயிலானது அமைந்துள்ளது. திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்படும் பொழுது இங்கும் தீபம் ஏற்றப்படுகிறது. இங்கு குவாரியை அமைத்தால் அதிகளவில் அதிர்வுகள் ஏற்பட்டு, கோயிலானது பாதிப்படையும், அருகிலுள்ள ஐந்து, ஆறு விவசாய கிராம மக்களின் ஆடு மற்றும் மாடுகள் இம்மலையில் மேய்கிறது. எனவே, இக்குவாரியால் அதிகளவில் பாதிப்பு ஏற்படும் என்று கூறினார். **(தனது கருத்தை தெலுங்கு மொழியில் கூறினார்)**

**10. திரு.கிருஷ்ணப்பா, விவசாய சங்கத் தலைவர் :**

திரு. கிருஷ்ணப்பா அவர்கள், எங்களது முட்டைகோஸ் தோட்டத்தில் குவாரியின் இயக்கத்தினால் தூசுக்கள் எழும்பி முட்டைகோஸில் படிகின்றன. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, 6 மாதம் அல்லது வருடத்திற்கு ஒருமுறை எங்கள் கிராமத்தில் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவ்வாறு வழங்காவிடில் இக்குவாரிக்கு அனுமதி அளிக்கக் கூடாது. **(தனது கருத்தை தெலுங்கு மொழியில் கூறினார்).**

**11. திரு.ரவி, ஒன்னுகுறுக்கி கிராமம் :**

திரு.ரவி அவர்கள், நாங்கள் 29 வருடமாக இப்பகுதியில் வசித்து வருகிறோம். இதுவரையில் இங்கு இதுபோன்ற கருத்துக் கேட்புக் கூட்டம் குவாரிக்காக நடந்தது இல்லை. குவாரி நிர்வாகத்தினர் ஒன்னுகுறுக்கி, ஜக்கேரி, மல்லேப்பள்ளம் போன்ற கிராமங்களுக்கு இதுவரை எவ்வித நிதி உதவியும் செய்ததில்லை. ஆடு, மாடு, வீடுகள் மற்றும் யானை வழித்தடம் இக்குவாரியில் பாதிப்படைகின்றன என்று கூறினார்.

**12. திரு.ராஜப்பா, ஒன்னுகுறுக்கி கிராமம் :**

திரு. ராஜப்பா அவர்கள், இந்த தமிழ்நாடு மினரல் குவாரிக்கு அருகில் எனது பட்டா நிலம் அமைந்துள்ளது. அதிகளவில் குவாரியின் கழிவுகளை எங்களது நிலத்தில் கொட்டுகின்றனர். எனக்கு தெலுங்கு மொழி மட்டுமே தெரிந்துள்ள காரணத்தினாலும், தமிழ் மொழி அறியாத காரணத்தினாலும் என்னை ஏமாற்றி எங்களது இடத்தில் குவாரியின் கழிவுகளை கொட்டியுள்ளனர். இக்கழிவுகளை அகற்றுவதற்கு 20 முதல் 30 லட்சம் வரை செலவானது என்று தெரிவித்தார். மேலும், இங்குள்ள சிவன் கோயிலானது கிராம மக்களுக்கு மிகவும் உணர்வு பூர்வமானது. எனவே, இக்குவாரியை இங்கு அமைப்பதற்கு தாங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறினார். **(தனது கருத்தை தெலுங்கு மொழியில் கூறினார்).**

**13. திரு. ராஜேஷ் குமார், ஜக்கேரி, ஊராட்சி மன்றத் தலைவர் :**

திரு. ராஜேஷ் குமார் அவர்கள், கிராமத்தில் இக்குவாரிக்கு எதிராக மக்கள் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதாக உத்தேசித்துள்ளதாக தெரிவித்தார். மேலும், இங்குள்ள சிவன் கோயிலானது பல வருடம் பழமையானது என்றும் அது பொதுமக்களுக்கு உணர்வு பூர்வமானது என்று கூறினார். எனவே, பொதுமக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இக்குவாரி திட்டத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**14. திரு. ராமகிருஷ்ணன், மல்லேப்பள்ளம் கிராமம் :**

திரு. ராமகிருஷ்ணன் அவர்கள், 800 ஆண்டுகள் பழமையான மற்றும் பிரசித்தி பெற்ற சிவன் கோயில் மற்றும் குகை கோயில் ஆகியவை இக்குவாரிக்கு அருகில் உள்ளன. திருவண்ணாமலையில் தீப விழா காலங்களின் பொழுது இக்கோயில்களில் தீபம் ஏற்றுவர். தற்போது, இக்குவாரி அமைவதால் இக்கோயில்களுக்கு பாதிப்பு ஏற்படும் மற்றும் மக்களின் கடவுள் நம்பிக்கைக்கு எதிராக அமையும். மேலும், குவாரியில் வேலை செய்த பல தொழிலாளர்கள் உயிரிழந்ததாக தெரிவித்தார்.

**15. திரு . சங்கர், வசந்த நகர்:**

திரு. சங்கர் அவர்கள், குவாரியின் செயல்பாட்டால் ஆடு, மாடுகள் மேய்க்க இயலவில்லை. மேலும், இக்குவாரியில் எங்கள் கிராமத்தில் உள்ள கங்கம்மா கோயில், ஏரி, வீடுகள் பாதிப்படையும். திருவண்ணாமலையில் தீபம் ஏற்றும் பொழுது அருகிலுள்ள கோயில்களில் தீபம் ஏற்றுவர். தற்பொழுது, இக்குவாரி அமைவதால் இந்து சமய நம்பிக்கை பாதிப்படையும் என்று கூறினார். மேலும், இக்கருத்து கேட்புக் கூட்டத்தை விடுமுறை தினத்தில் குவாரிக்கு அருகில் நடத்தியிருக்கலாம் என்று தெரிவித்தார்.

**16. திரு. லோகேஷ், மல்லேப்பள்ளம் கிராமம் :**

திரு. லோகேஷ் அவர்கள், இங்குள்ள கோயில்கள் பற்றிய தகவல்கள் Google வளைதளத்தில் உள்ளதாகவும், பொது மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்காத வண்ணம் இக்குவாரியை இங்கு அமைக்க கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வண்ண கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 6 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வண்ண கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரனைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர்<br>24/01/25 | உதவி ஆணையர் (கலால்),<br>கிருஷ்ணகிரி<br>5/7 | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி<br>5/7 |